முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1117

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.10.2022, வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அறம்காத்து வருகின்ற தேசிகா வாழ்க
ஆறுமுகன் என் வடிவமான அண்ணலே
அன்னதான வள்ளலே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஊழ்போக்கும் மாதவசி நீயப்பா
உலகை காக்கும் மகா யோகி நீயப்பா
3. அப்பனே உன்னுள் யானிருந்து
ஆக்கம் பல உலகோர்க்கு தந்து வர
ஒப்புகொண்டு உன்னை வணங்க நினைத்தால் போதும்
உலகோர்க்கு உடன் மாற்றம் சடுதி காணும்
4. காணவே உன்வழி என்னை வணங்கும்
கலியுகத்து மக்கள் அனைவருக்கும்
மேன்மைதரும் பலனை ஆறுமுகன் யான்
மேலான அரங்கன் உன் ஆசி வழி நடத்தி அருள்வேன்
5. அருளவே அரங்கனை எந்தன் சக்தியாக
அகிலத்தில் எண்ணி தொடருபவர்க்கு
மிகையான மாற்றமும் நல்ல தேற்றமும்
முக்தி நிலைகாணும் பெருநிலையும் இனிதே ஆறுமுகன் யான் நடத்தி அருள்வேன்
6. அருளவே அரங்கனுள் என்னை காண
ஆறுமுகனாகவும் ஆற்றலாகவும்
வரம் தந்து எண்ணுகின்ற மக்கள் வாழ்வில்
வளர்ச்சியும் இனி பிறவாத பெரும் மகிழ்ச்சியும் தந்தருள்வேன்
7. அருளவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
அடையாளம் கண்ட மக்களுக்கு இனி
பிறவி என்பது இல்லாத வண்ணம் பேராற்றல் கூட்டி இனிதே
பெரும் பேறு இயல்பாய் அடைய அருள்புரிவேன்
8. அருளவே அரங்கனை தொடர்ந்தால்
அனைத்தும் உலகினில் இலகுவாக சித்திக்கும்
பெருமளவில் தர்மத்தைக் கைக்கொண்டு
பிரணவக்குடில் தொடர்பு கூட்டினால்

9. கூட்டுகின்ற மக்களுக்கெல்லாம் இனிதே
குரு அரங்கன் வழி ஆறுமுகன் யான்
தட்டாது அருளி சர்வ பலம் தந்தருள்வேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–